ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2487/17 - 2026 මැයි මස 05 වැනි අඟහරුවාදා - 2026.05.05

2487/17 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பத்தேகம பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: BDD/LND/02/104 - 2018.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2016/டீ/91.

மேற்படி தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு இல. 2463/08 - 2025 நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி கொண்ட (அதி விசேட) வர்த்தமானியில் காணி/வசதி உரிமைக்கு உரித்து, சொந்தங்கள் அல்லது வேறு தொடர்புகளைக் கோரிக் கொள்ளும் அனைவரும் தாமாகவோ அவர்களின் ஆவணங்களால் அங்கீகாரம் பெற்றவர்களோ 2026.01.23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பத்தேகம பிரதேச செயலகத்தில் என்முன் தோன்றிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதுடன், அது பின்வருமாறு சரி செய்யப்பட வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

காணிக்கு/ வசதி உரிமைக்கு உரித்து, சொந்தங்கள் அல்லது வேறு தொடர்புகளைக் கோரிக்கொள்ளும் அனைவரும் தாமாகவோ அவர்களின் ஆவணங்களால் அங்கீகாரம் பெற்றவர்களோ இலக்கம் 07, 2026.05.25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பத்தேகம பிரதேச செயலகத்தில் என்முன் தோன்றிட வேண்டும் என்று திருத்தப்பட வேண்டும்.

நிலூகா எல். சூரியஆரச்சி,
பிரதேச செயலாளர்,
பத்தேகம.

பிரதேச செயலகம்,
பத்தேகம,
2026, ஏப்பிறல் 24.

EOG 05 - 0012



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/VS/ACQ/J-189. H/01.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/16/2018/H/35.

**2025.12.09 ஆந் திகதிய 2466/12 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் (அதி விசேடமானது) 1ஏ மற்றும் 2ஏ பக்கத்தில்**

"மேற்குறித்த காணிக்கு உரிமை/ ஆட்சி உரிமை எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உடுவில் பிரதேச செயலகத்தில் என் முன்பாக தமது உரித்தை வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ ஆட்சி உரிமையை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு முன்னளிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்." எனக் குறித்திருந்தது.

"மேற்குறித்த காணிக்கு உரிமை/ ஆட்சி உரிமை எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலகத்தில் என் முன்பாக தமது உரித்தை வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ ஆட்சி உரிமையை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களை யும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு முன்னளிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்." எனத் திருத்தப்பட வேண்டும்.

திருமதி பிரேமினி பொன்னம்பலம்,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் தெற்கு,
உடுவில்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு,
உடுவில்,
2026, மாச்சு 24.

EOG 05 - 0016